IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# திருமந்திரத்தில் பண்பாட்டு நெறி

**முனைவர் பொ.ராணி**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**
**கோயம்புத்தூர்-43**

திருமந்திரம் சைவசமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமைந்திடாமல், உலக மக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்மீகத்தையும், பண்பாட்டு நெறியையும், மருத்துவத்தையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது. மக்கள் வாழும் முறைகளையும் வாழவேண்டிய முறைகளையும் எடுத்துக்கூறுகிறது. அறவழி கற்பதும், அருள்வழி நடப்பதும், அன்பினால் மற்ற உயிர்களுக்கு இன்னல் செய்யாமல் இருப்பது போன்ற அனைத்து அறநெறிகளையும் உணர்த்துகின்றது.

வாழ்க்கையின் வெற்றிக்கு ஆதாராமாக இருக்கக்கூடிய உடலையும் உள்ளத்தையும் சீராக்கும் முறையை தெளிவுபட உணர்த்தியுள்ளார். தன்னலமற்ற அன்போடு பிறருக்கு உதவுவது, மனப்பக்குவத்தை அடைவது, தன்னைத் தான் அறிவது என பல கருத்துக்களை தன்பாடலின் வழி எடுத்துரைத்துள்ளதை தொகுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**அன்புடைமை**

அறிவற்றவர்கள் அன்பும் சிவமும் வேறுவேறு என்பர். அன்பும் சிவமும் ஒன்று என்று அறிய முற்படுபவர்கள், அறிந்தபின் அன்பே சிவமாய் இருப்பதை அறிந்துகொள்வர். தம்முடைய உடலை துண்டுதுண்டாக விறகுபோல் வெட்டி, தீயிட்டு இறைவனுக்குப் படைத்தாலும் அன்போடு உருகி இறைவனை வழிபடுவார்க்கு அவனது அருள் கிடைக்கும்.

**“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆறும் அறிகிலார்**” (270)

மக்கள் ஒருவருக்கொருவர் செலுத்தும் அன்பில் தாம் இவ்வுலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும் கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினைப் போற்றுகின்றன.

கோவிலுக்குச் செல்வது, பூஜை செய்வது, மந்திரம் சொல்வது, படையல் வைப்பது போன்றவற்றை விட, நம் உள்ளம் உருகி இறைவனை சரணடைவதால் அவனது திருவருள் அனைவருக்கும் கிடைக்கும்.

**“அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி**
**என்போய் மணியினை எய்த வெண்ணாதே**” (272)

மனிதர்கள் தமது உடலைக் கொடூரமாக வருத்திக் கொண்டு தவம் புரிந்தாலும், தமது உடலைத் தீயிலிட்டு யாகம் புரிந்தாலும், அவர்களது உள்ளத்தில் உண்மையான அன்பு இல்லை என்றால், அவர்கள் என்ன செய்தாலும் இறைவனை அடைய முடியாது. தூய்மையான அன்பே இறைவனை அடையும் மிகச் சிறந்த வழியாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உடலை விட்டு உயிர் பிரியும் முன், தனது அன்பினை அனைத்து உயிர்களிடமும் காட்டுவதன் மூலம் இறைவனை அடையமுடியும் என்பதனை,

**"என் அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்**
**தன் அன்பு எனக்கே தலைநின் வாறே"** **(274)**

திருமூலர் தன்னைப் போலவே உள்ளம் உருக இறைவனை வழிபடச் சொல்லி உபதேசித்துள்ளார்.

**"கொழுந்தன்பு செய்து அருள் கூரவல்லார்க்கு**
**மகிழ்ந்தன்பு செய்யும் அருள் அதுவாமே"** **(280)**

தன்மை இகழ்ந்து பேசும் உயிர்களையும், போற்றி வணங்கும் உயிர்களையும் இறைவன் அறிந்திருப்பான். அவரவர் மனதிற்கேற்ப அருளை வழங்கும் தன்மை இறைவனிடம் உண்டு. உள்ளத்திலிருந்து வெளிவரும் தூய்மையான அன்பினைக் கொண்டு வழிபட்டால் மகிழ்ச்சியுடன் நமக்கு வேண்டியதை உடனே தந்துவிடும் இறைவனின் பேரருளைப் பற்றி தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**அறம் செய்வார் அடையும் பயன்**

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறிகளில் முழுநிறை வடிவமே அறமாகும். நல் வாழ்விற்குரிய அனைத்து செயல்களையும் தன்னுள் கொண்டுள்ளது. மனிதனையும் சமுதாயத்தையும் நெறிபடுத்தும் ஒழுக்கநெறியாகவும் அறத்தால் வருவதே இன்பம் என்பதையும் உணர்ந்து வாழ வேண்டும்.

**"தாமறிவார் அண்ணல் தாள்பணிவார் அவர்**
**தாமறிவார் அறம் தாங்கி நின்றார் அவர்"** **(251)**

நான் என்பது எது என்பதை முழுமையாக அறிந்தவர்களுக்கும் இறைவனின் திருவடிகளைத் தினமும் வழிபடுபவர்களும், தர்மத்தின் வழிமுறைகளை கடைப்பிடித்து வாழ்பவர்களுக்கும் இறைவனை அடையும் பேறு கிட்டும் என்பதை இப்பாடலின் வழி எடுத்துரைத்துள்ளார்.

**"பிழிந்தன போலத் தம் பேரிடர் ஆக்கை**
**ஆழிந்தன கண்டும் அறம் அறியாரே"** **(261)**

வாழ்நாளில் காலங்கள் ஓடிக்கொண்டே இருப்பதால், வாழும் நாட்கள் குறைந்து, உடலானது சக்கையாகப் பிழிந்து எடுக்கப்பட்டது போல, வயதாகி சுருங்கிப்போய் இறுதியில் முழுவதும் அழியும் நிலையும் ஏற்படுகிறது. இவ்வுண்மையை அறிந்துகொண்டு வாழும் நாட்களில் அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

**கொல்லாமை**

எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் போற்றுவது ஒழுக்க குணங்களில் ஒன்றாகும். எந்த ஓர் உயிரையும் பொருளுக்காகவோ, உணவுக்காகவோ, பகை காரணமாகவோ, உயிர்பலி வழிபாட்டிற்காகவோ கொல்லக்கூடாது.

**“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லடிக்காரர் வயிக்கயிற்றால் கட்டி”** (198)

பிற உயிர்களை கொன்றுவிடு, குத்திவிடு என்று கொலைவெறி பிடித்துக் கூறும் மிருகத்தன்மை கொண்டவர்களை எமனின் தூதுவர்கள் வந்து வலிமையான பாசக்கயிற்றால் கட்டி அதட்டிக் கொண்டே இழுத்துச்சென்று கொடிய வெப்பம் கொண்ட தீயினுள், நிற்கும்படி செய்து விடுவார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறார்.

**கொடைச் சிறப்பு**

ஈரம் நிறைந்த உள்ளத்தால் பிறர் விழிநீரையும் மனவலியையும் துடைப்பது கொடையாகும். மனிதனின் தேடும் உள்ளத்தால் வாடும் மனம் அறிந்து உதவவேண்டும். இறைவனால் கொடுப்பது அருட்கொடை. மனிதனால் கொடுப்பது பொருட்கொடை என்பதை உணரவேண்டும்.

**“ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருள் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்”** (250)

அவர்கள், இவர்கள், உறவினர்கள், பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள் என்று எந்தவித பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் கொடுத்து உதவ வேண்டும். சாப்பிடுவதற்கு முன்பு யாராவது பசியுடன் வருகின்றார்களா என்று பார்த்துவிட்டு உண்ண வேண்டும். பழைய உணவை சேமிப்பாக கருதி எடுத்து வைக்காமல் உடனே பசியோடு இருப்பவர்களுக்கு கொடுக்க வேண்டும். காக்கையைப் போல அனைவருக்கும் உணவை கொடுத்து சாப்பிட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

**“அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்**
**தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்”** (254)

மும்மலங்களாகிய அழுக்குகளை அகற்றும் உண்மையா ஞானத்தை அறிந்திடாமலும், உள்ளத்தில் இறைவனை நினைத்திடாமலும், கல்வியும் செல்வமும் நிறைந்த இவ்வுலகில் தருமங்கள் செய்திடாலும், வாழ்ந்து கொண்டிருப்பதால் என்ன பயன்? வாழ்க்கை முழுவதும் தருமம் செய்யும் பரந்த மனம் இல்லாமல் ஏழை மனதாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு தன் பாடல்களின் வழி கொடைச் சிறப்பின் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளார்.

**“உற்று உங்களால் ஒன்றும் ஈந்ததுவே துணை**

**மற்று அண்ணல் வைத்த வழிகொள்ளுமாறே”** (259)

இறைவனின் திருவடிகளைப் பற்றுக்கொண்டு, அறநெறிகளின் வழி நடப்பது மட்டுமின்றி, நம்மால் இயன்ற அளவு வேண்டும் என்று கேட்பவர்களுக்கு மனமுவந்து கொடுப்பதும் இறைவனை அடைவதற்கான வழிகள் இவை இவை என்பதைத் தெரிந்து கொண்டு அவற்றை கடைபிடித்தும் வாழ வேண்டும் என்று கூறியுள்ளார்.

**நடுவுநிலையாமை**

**“நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை**
**நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை”** (320)

நடுவுநிலைமை தவறாது அறவழியில் நடப்பவருக்கு ஞானம் கிடைக்கப்பெற்று, நரகத்தில் துன்புறும் நிலைமையும் ஏற்படாது என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

**“நடுவு நின்றார் சிலர் ஞானிகளாவர்**
**நடுவு நின்றவர் சிலர் தேவருமாவர்”** (322)

தவயோகத்தை மேற்கொள்வது போல நடுவுநிலைமை தவறாது வாழ்பவர்கள் உயர்ந்த தேவநிலையை அடையப்பெறுவார்கள்.

**கள் உண்ணாமை**

**“கழுநீர்ப் பசுப்பெறின் பின் கயந்தேரா**
**கழுநீர் விடாய்த் துத்தங்காயம் சுருக்கும்”** (324)

அரிசி கழுவிய நீரை பசுவுக்குக் கொடுத்தால் அதைக் குடித்துப் பழகிய பசு அதன்பின், குளங்களைத் தேடிச் சென்று நல்ல நீரைப் பருகாது. தாகம் எடுத்தாலும் எளிதாக கிடைக்கும் நல்லநீரை குடிக்காமல் அரிசி கழுவிய கழுநீருக்காக காத்திருந்து, தங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளும். அதுபோல போதைதரக் கூடிய மதுவைக் குடித்துப் பழகிய மனிதர்கள் ஒழுக்கத்திலிருந்து விலகி எளிதாக கிடைக்கும் செழுமையான நீரான சிவானந்த அமிர்தத்தைப் பருகாமல் மதுவை பருகி தங்களின் வாழ்க்கையை வீணாகக் கழிக்கின்றனர் என்று குறிப்பிடுகிறார்.

**“தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்**
**கள்ளுண்ணும் மாந்தர் கருத்துஅறி யாரே”** (328)

புத்தியை மயக்கும் மதுவை அருந்தி, அதில் மயங்கிக்கிடப்பவர்கள் இறைவனை அடையும் வழிகளைச் சொல்லும் வேதங்களின் கருத்தை அறியமாட்டார்கள். அறிவிற்கு தெளிவைக் கொடுக்கும் உண்மையான ஞானத்தைத் தரும் சிவயோகம் செய்பவர்களுடன் சேரவும் மாட்டார்கள், தானும் சிவயோகம் செய்ய மாட்டார்கள் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

**“மயக்கும் தியங்கும் கள்வாய்மை அழிக்கும்**

**இயங்கும் மடவார் தம் இன்பம் எய்தி”** (330)

மதுவானது குடிப்பவர்களின் அறிவையும், மனதையும் தடுமாற்றம் அடையச் செய்து உண்மை பேசுவதை தடுத்து பொய் பேச வைக்கும். மது அருந்துபவர்கள் இன்பத்திற்காக பொது மகளிரை நாடிச் சென்று, அவர்களிடம் மயங்கி இருப்பார்கள். இத்தகைய தன்மை உடையவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்கும் உண்மை ஞானத்தினால் உருவாகும் பேரானந்தம் ஒரு போதும் கிடைக்காது என்பதை தன் பாடலின் வழி எடுத்துரைத்துள்ளார்.

**தொகுப்புரை**

வாழ்க்கையின் செழுமைக்கும் மகிழ்ச்சிக்கும் வழிகாட்டுதல், மனித வாழ்வின் தரத்தை உயர்த்துதல், வாழ்வின் இலக்கை அடைதல், மன அழுத்தத்திலிருந்து விடுபடுதல், எதையும் தாங்கும் மனவலிமையைப் பெறுதல், உடம்பைப் பராமரிக்கும் முறைகளை அறிந்துகொள்ளுதல், உள்ளத்தை தூய்மையாக வைத்திருத்தல் என அனைத்து ஆதாரங்களுக்கும் இறைவனே முழுமுதற்பொருள் என்பதை உணர்ந்து செயல்படுதல் போன்ற பண்பாட்டு நெறிகளை திருமந்திரத்தில் எடுத்துக்காட்டியுள்ளார்.

தன்னை அறிதல், தனக்குள் இருக்கும் இறையாற்றலை அடைவதற்குரிய வழிமுறைகளை அறிதல், இயற்கைத் தன்மையை அறிதல், அன்பு, அறிவு, ஆற்றல் போன்றவை இறைவனின் அருளால் கிடைக்கும் என்பதை அறிதல், அன்பு, கருணை, இரக்கம், பிறர் துன்பம் கண்டு மனம் இறங்குதல், கள்ளுண்ணாமை, நடுவுநிலைத் தவறாமை, அனைத்து உயிர்களையும் தம் உயிர் போல் கருதுதல் என பண்பாட்டு நெறிகளை மக்கள் அனைவரும் தம் வாழ்நாளில் கடைபிடித்து வாழவேண்டும் என்பதை தம்பாடல்களில் வலியுறுத்தியுள்ளார்.

**துணைநின்ற நூல் :**

1. **ஞா.மாணிக்கவாசகன் - திருமந்திரம் மூலமும் உரையும்**
**உமா பதிப்பகம், சென்னை.**